**இ.க.நி.சே. தரம் I உத்தியோகத்தர்களை கல்விப் பணிப்பாளர்/ ஆணையாளர் பதவிகளுக்கு நியமிப்பதற்கான கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கான புள்ளி வழங்கல் திட்டம் - 2025**

**1. சேவை அனுபவம்** ஆகக் கூடிய புள்ளிகள் 50

(இ.க.நி.சேவையின் தரம் I இற்கு பதவி உயர்வு பெற்ற தினம் முதல் ஒரு வருடத்திற்கு வழங்கப்படும் புள்ளியானது, அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் இல. 01/2019 சுற்றுநிருபத்திற்கமைய தரம் I இல் ஆகக் கூடிய சேவைக் காலத்தை உடைய உத்தியோகத்தருக்கு சேவை அனுபவத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள மொத்தப் புள்ளியும், ஏனைய உத்தியோகத்தர்களுக்கு சம விகித அடிப்படையில் தரம் I இல் சேவைக் காலத்திற்கும் புள்ளிகள் உரித்தாகும் வகையில் புள்ளிகள் வழங்கப்படும்.)

குறிப்பு: இ.க.நி.சேவை தரம் II இல் இரண்டு (02) வருட சேவைக் காலத்துடனும் தரம் II மற்றும் III ஆகியவற்றில் 12 வருடங்களுக்கு மேற்பட்ட முனைப்புடன் கூடிய திருப்திகரமான சேவைக் காலத்தை நிறைவு செய்த பின்னர் தரம் I இற்கு பதவி உயர்வு பெற்றுள்ள உத்தியோகத்தர்களது, குறித்த மொத்த சேவைக் காலமான 12 வருடங்களும் தரம் II இல் இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட மேலதிகமான முனைப்புடன் கூடிய திருப்திகரமான சேவைக் காலமும் தரம் I இற்குரிய சேவைக் காலமாக கருதி புள்ளிகள் வழங்கப்படும்.

**2. மேலதிக கல்வித் தகைமைகள்** ஆகக் கூடிய புள்ளிகள் 15

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பட்டமளிக்கும் நிறுவனம் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டுள்ள நிறுவனமொன்றில் அல்லது தேசிய கல்வி நிறுவகத்தில் பெற்றுக் கொண்ட தகைமைகளுக்கு மாத்திரம் புள்ளி வழங்கப்படும்.

(ஆட்சேர்ப்பு செய்யும் போது அல்லது வினைத்திறன்காண் தடைதாண்டலுக்காக அல்லது தரங்களுக்கான பதவி உயர்வின் போது அடிப்படைத் தகைமையாக கொள்ளப்பட்ட கல்வித் தகைமைகளுக்கு புள்ளி வழங்கப்படமாட்டாது)

| | |
|---|---|
| 2.1 கலாநிதிப் பட்டம் (PhD) | - 15 புள்ளிகள் |
| 2.2 தத்துவமானி (M Phil) | - 13 புள்ளிகள் |
| 2.3 பட்டப் பின் பட்டம் | - 11 புள்ளிகள் |
| 2.4 பட்டப் பின் டிப்ளோமா | - 09 புள்ளிகள் |
| 2.5 ஆரம்ப பட்டம் | - 07 புள்ளிகள் |
| 2.6 கல்வித் துறை/ ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பாடத்துறை சார்ந்த டிப்ளோமா | - 05 புள்ளிகள் |
| 2.7 வேறு டிப்ளோமாக்கள் | - 03 புள்ளிகள் |

(மேலே 2.6 மற்றும் 2.7 இன் கீழ் புள்ளி வழங்கும் போது உரிய டிப்ளோமாவின் கற்கைக் காலம் ஆகக் குறைந்தது 450 மணித்தியாலங்கள் அல்லது 9 மாதங்கள் அல்லது அதற்கு மேற்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன், டிப்ளோமா வழங்கிய நிறுவனம் அரசில் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் அல்லது மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் ஒன்றாக இருத்தல் வேண்டும்.)

**3. கல்விசார் ஆராய்ச்சிகள் மற்றும் வெளியீடுகள்** ஆகக் கூடிய புள்ளிகள் 10

3.1 ஆராய்ச்சிகள்

i. தனி நபர் ஆராய்ச்சி அறிக்கை - 05 புள்ளிகள் × 2

ii. குழு ஆராய்ச்சி அறிக்கை - 03 புள்ளிகள் × 2

(பட்டப் பின் பட்டத்திற்காக/ பட்டப் பின் டிப்ளோமாவிற்காக முன்னிலைப்படுத்தும் ஆய்வு நூலுக்கான ஆராய்ச்சிகள்/ நூல்களுக்கு புள்ளி வழங்கப்படமாட்டாது என்பதுடன்,



CamScanner

பகிரங்கமான ஆராய்ச்சிக் கலந்துரையாடல் மன்றம் ஒன்றில் (Research Symposium ) சமர்ப்பிக்கப்பட்ட அல்லது ஆராய்ச்சி சஞ்சிகை ஒன்றில் (Research Journal) பிரசுரிக்கப்பட்ட ஆகக் கூடியது 02 ஆராய்ச்சி அறிக்கைகளுக்கு மாத்திரம் புள்ளி வழங்கப்படும் )

3.2 நூல்கள் மற்றும் வெளியீடுகள் - 05 புள்ளிகள் × 2

(பாடப் புத்தகங்கள் மற்றும் அவை சார்ந்த வாசிப்பு நூல்களுக்கு புள்ளி வழங்கப்படமாட்டாது என்பதுடன், கல்வி நூல் வெளியீட்டு ஆலோசனை சபையினால் அனுமதியளிக்கப்பட்ட தனி நபரால் எழுதப்பட்ட நூல்கள் மற்றும் வெளியீடுகள் ஆகக் கூடியது 02 இற்கு மாத்திரம் புள்ளி வழங்கப்படும்.)

3.3 கல்வித் துறைசார் கட்டுரைகள்/ அறிக்கைகள் – 02 புள்ளிகள் × 5

(கல்விசார் சஞ்சிகைகள், சஞ்சிகைகள் மற்றும் வார வெளியீடுகள், செய்திப் பத்திரிகைகளில் தனி நபரால் பிரசுரிக்கப்பட்ட செய்தியல்லாத கல்வித் துறைசார் விடயமொன்றின் கீழான கட்டுரை அல்லது அறிக்கைகள் மாத்திரம் (ஆகக் குறைந்தது 750 வசனங்கள் இருத்தல் வேண்டும்.) புள்ளி வழங்கப்படும். (ஒன்றிற்கு 02 வீதம் ஆகக்கூடியது 05 இற்கு)

4. கணினிசார் அறிவு ஆகக் கூடிய புள்ளிகள் 05

(பிரயோக பயன்பாடு தொடர்பில் கருத்தில் கொள்ளப்படும். இதன் போது இலக்கம் 6 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கணினியைப் பயன்படுத்தி Power Point மூலமாக முன்வைப்பு ஒன்றை செய்ய வேண்டும் என நேர்முகப் பரீட்சை சபையினரின் தீர்மானத்திற்கமைய office package சார்ந்த வேறு ஏதேனும் ஒரு செயற்பாட்டையேனும் கணினியைப் பயன்படுத்தி செய்யக்கூடிய திறன் தொடர்பில் கருத்தில் கொள்ளப்படும்)

5. ஆங்கில மொழித் தேர்ச்சி ஆகக் கூடிய புள்ளிகள் 05

(தொடர்பாடல் திறன் கருத்தில் கொள்ளப்படும். இதன் போது பேச்சுத் திறன், ஏதேனும் ஒன்றை வாசித்து புரிந்து கேட்கப்படும் வினாக்களுக்கு சரியாக விடையளிக்கும் திறன், வினாக்களுக்கு விடையளிக்கும் திறன் தொடர்பில் மதிப்பீடு செய்யப்படும்)

6. முன்வைப்பு ஆகக் கூடிய புள்ளிகள் 10

சேவை நிலையத்தில் (கல்வி அமைச்சு/ இலங்கை பரீட்சை திணைக்களம்/ கல்வி வெளியீட்டுத் திணைக்களம்/ மாகாணக் கல்வித் திணைக்களம்/ வலயக் கல்வி அலுவலகம்/ கோட்டக் கல்வி அலுவலகம்/ பாடசாலை) கடமைகளை நிறைவேற்றும் போது, கல்விப் புலத்தின் பண்புத்தரம் மற்றும் விளைதிறனை மேம்படுத்துவதற்கு அடிப்படையான விடயம்/ சந்தர்ப்பம்/ வேலைத்திட்டம்/ செயற்றிட்டமொன்றை அடிப்படையாக கொண்டு அதனைப் பகுப்பாய்வு செய்து மேற்கொள்ளப்படும் முன்வைப்பு ஒன்றிற்கு கீழ்வருமாறு புள்ளிகள் வழங்கப்படும்.

| | | |
|---|---|---|
| i. | பிரவேசம் மற்றும் அறிமுகம் | - 2 புள்ளிகள் |
| ii. | உள்ளடக்கம் | - 4 புள்ளிகள் |
| iii. | முன்வைப்புத் திறன் | - 2 புள்ளிகள் |
| iv. | நேர முகாமைத்துவம் | - 2 புள்ளிகள் |

அதற்காக கணினி மூலம் தயாரிக்கப்பட்ட (Power Point) அல்லது வேறு பொருத்தமானதொரு ஊடகத்தைப் பயன்படுத்தி 05 நிமிட முன்வைப்பு ஒன்றை செய்ய வேண்டும் என்பதுடன், செய்யப்படும் முன்வைப்புக்குரிய வன் பிரதியினை நேர்முகப் பரீட்சை சபையினரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

7. நேர்முகப் பரீட்சையில் வெளிக்காட்டும் ஒட்டுமொத்த திறமை ஆகக் கூடிய புள்ளிகள் 05



100

CamScanner